## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C.No.56/2020

2024 ஆம் வருடம் நவம்பர் மாதம் 04 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. நாட்டுத்துரை (அ.சா.9) | தொழில் | : | ஆடு மேய்த்தல் |
| த/பெ., க/பெ. | : | திரு.பழனிச்சாமி | வயது | : | 35 |
| கிராமம் | : | ஆயக்குடி | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 04.11.2024 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1ம் எதிரி முன்னிலையாகியுள்ளனர்.

2ம் எதிரி முன்னிலையாகவில்லை. அதற்கான மனு ஏற்கப்பட்டது.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் ஆயக்குடியில் குடியிருந்து ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறேன். 2ம் எதிரி குட்டி என்ற சுகுமாறனை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேலும் என்னிடம் காட்டப்படும் 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பமும் என்னுடையதுதான். 04.04.2018ம் தேதியன்று எனது சகோதரர் கிருஷ்ணசாமி என்பவரை கத்தியால் குத்தியது சம்பந்தமாக பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். காயம்பட்ட கிருஷ்ணசாமியின் காக்கி உடையை போலீசார் வாங்கிக் கொண்டார்கள். அதற்கு நானும் ராமசாமியும் சாட்சிக் கையொப்பம் போட்டோம். அத்தாட்சி அ.சா.ஆ.4. காவல் நிலையத்திற்கு எங்களை வரச்சொன்னார்கள். நானும் ராமசாமியும் அதே தினம் மாலை 7–1/4 மணியளவில் சென்றோம். அங்கு

2ம் எதிரியின் ஒப்புதலுக்கு கையொப்பம் போடச்சொன்னார்கள். நானும், ராமசாமியும் சாட்சி கையொப்பம் போட்டோம். அதில் கத்தியால் குத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் புதிய சங்கதிகள் எதுவும் புலன் விசாரணையில் கண்டுபிடிக்கப்படாததால் ஒப்புதல் வாக்குமூலத்தின் எந்தப் பகுதியும் குறியீடு செய்யப்படவில்லை). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை : நானும், காயம்பட்ட கிருஷ்ணசாமியும் உறவினர்கள் என்றால் சரிதான். கிருஷ்ணசாமிக்கு காயம்பட்டது குறித்து 2–1/4 மணியளவில் எனக்கு தகவல் வந்தது. அரை மணி நேரத்தில் நாங்கள் வந்து பார்த்தோம். நானும், ராமசாமியும் தகவல் வந்தபோது ஆடு மேய்த்துக்கொண்டிருந்தோம். போலீசார் கையொப்பம் வாங்கிய தாள்களில் என்ன விபரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.1ன் ஆடையின் எந்த பகுதியில் எவ்வளவு தூரம் கிழிந்திருந்தது என்றால், இடதுபுறம் கிழிந்திருந்தது. எவ்வளவு தூரம் கிழிந்திருந்தது என்று எனக்கு தெரியாது. அத்தாட்சியில் என்ன விபரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது.

மறு விசாரணை இல்லை.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.11.04 19:12:38 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
பழனி.